

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சியில் மணஞ்சேரி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் .டி. ஆர்.பாலு திறந்து வைத்தனர். சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை உடன் உள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி, 40வது வார்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஆவடி சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூபாய் 8 லட்சத்தில் கட்டப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் ஆவடி மாநகர ஆணையர் சரண்யா, மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பொன் விஜயன், மாமன்ற உறுப்பினர் சத்யா கோ.ரவி, யுவராஜ், வழக்கறிஞர் பெ.வினோத் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உள்ளனர்.

### எஸ்.ஜெகன்நாத் தலைமை! துறைமுகம் தொகுதி

# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி–எஸ்.ராஜசேகர் முன்னிலை!

சென்னை, நவ.16-

துறைமுகம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஜெகன்நாத் தலைமையில் இன்று (16.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் துறைமுகம் சட்டமன்ற தொகுதி அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின் படி நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.ராஜசேகர், துறைமுகம் தொகுதி பொறுப்பாளர் இரா.நரேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் க.பா.பிரதீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த கூட்டத்தில் துறைமுகம் தொகுதி சார்ந்த தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள், வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பாக ஒருங்கிணைப்பாளர்கள் (BDO) கலந்து கொள்கின்றனர்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ஏ. ஆதில் அகமது, துறைமுகம் தொகுதி சமூகவலைதள ஒருங்கிணைப்பாளர் ரா. ரஞ்சித்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (S.I.R) பணி குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், நவ. 16

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய அவசரச் செயற்குழுக் கூட்டம் ஒன்றிய அவைத் தலைவர் ஜே.சிவபாதம் தலைமையில் இன்று (16.11.2025 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 1.00 மணி அளவில், சுங்கு வார்சத்திரத்தில் உள்ள குரு மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

எனவே ஒன்றியத்திற்குட்பட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், BLA2, BDA, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னணியினர், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் இதையே அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவ. 27 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் குறித்து மற்றும் 2026 தேர்தல் பணிகள் குறித்து

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழக மூத்த முன்னோடியும் முன்னாள் முடிச்சூர் ஊராட்சி கிளை செயலாளர் க.கந்தசாமி தற்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தகவல் அறிந்து தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ மருத்துவமனைக்கு சென்று உடல்நலம் மற்றும் மருத்துவ சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.உடன் முடிச்சூர் ஊராட்சி மன்ற உறுப்பினர் க.மணிகண்டன் உள்ளார்.

### மயிலை 124.அ வட்ட பகுதிப் பிரதிநிதி எம்.அல்ராஜ் தாயார்

# எம்.மாணிக்கம்மாள் நினைவு அஞ்சலி படத்திறப்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர் மயிலைத. வேலு எம்.எல்.ஏ., அஞ்சலி!



சென்னை, நவ.16

மயிலை 124.அ வட்ட பகுதிப் பிரதிநிதி எம்.. அல்ராஜ் தாயார் எம். மாணிக்கம்மாள் 13வது நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (16.11.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 7 மணியளவில் எண்.12, லாலா தோட்டம் / மயிலாப்பூர் எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அன்னாரது திருவுருவ படத்தை திறந்து வைத்து, சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர் எஸ் முரளி. 124 அ வட்ட செயலாளர் மா.பா அன்பு, 124 வது வார்டு மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதில் வட்டக் கழகத்தைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகளும் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சார்ந்த அமை ப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டு மாய் வட்டச் செயலாளர் மா.பா. அன்பு கேட்டுக் கொண்டுள்ளார்.



எழும்பூர் தொகுதி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன் தாயார் கே.கல்யாணி வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தியதையடுத்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கழகத்தினர் இருந்தனர்.




